மැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **PE/2024/11** **2024.10.07**

## பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14

## அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பித்தல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்கிணங்க இப்பாராளுமன்றத் தேர்தலின் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட/ நியமிக்கப்படும் சாத்தியமுள்ள அனைத்து அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அலுவலர்களும்/ஊழியர்களும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது.

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்காதிருத்தல் அல்லது சில குறைபாடுகளின் காரணமாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படல், தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவதற்கொரு காரணமாக அமையாதென்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

அதேபோல், நேரடியாகவே தேர்தலோடு சம்பந்தப்பட்ட பணிக்கு நியமிக்கப்படாத எந்தவோர் அரச மற்றும் நியதிச்சட்ட சபை அலுவலரொருவரும்/ ஊழியரொருவரும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற மாட்டார் என்பதுடன், அவ்வாறான அலுவலர்கள்/ ஊழியர்கள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தல் அத்துடன் அவ்வாறான விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தாமல் இருக்குமாறு தாபனத் தலைவர்களுக்கும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. தகைமை பெறாத ஆட்களை அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பதற்குத் தூண்டுதலாகாது.

மேற்குறித்த அறிவுறுத்தல்களின்படி செயலாற்றாதிருத்தல், அரசியலமைப்பின் 104எஎ உறுப்புரைக்கிணங்க தண்டப்பணமொன்று அல்லது/ அத்துடன் மூன்றாண்டு வரையான மறியற்றண்டனை ஆகிய தண்டனைகள் விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றமென்பது அறிவிக்கப்படுகிறது.

ஆதலால், இது சம்பந்தமாக விசேட கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளையும் தேர்தல் ஆணைக்குழு கோருகின்றது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(+94)112868441-42-43 (+94)112868426 info@elections.gov.lk www.elections.gov.lk Election Commission of Sri Lanka SriLankaElectionCommission elecomsl